# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-2, இதழ்-5, பிப்ரவரி - 2009 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிகை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]


## தம்ம வாக்கு

**நிட்டங்கதோ அஸந்தாஸீ, வீததண்ஹோ அநங்கணோ,**

**அச்சிந்தி பவஸள்ளானி, அந்திமோயங் ஸமுஸ்ஸயோ**

எவரொருவர் இலக்கை(அரஹந்த நிலையை) அடைந்துவிட்டாரோ, பயமற்றவராகவும், ஆசையற்றவராகவும், மன மாசுக்களற்றவராகவும் ஆகிவிட்டாரோ, பிறப்புக்கு காரணமான மூல வேர்களை அழித்துவிட்டாரோ, அவருக்கு இது தான் கடைசி பிறப்பாகும்.

தம்மபதம் – 351, தன்ஹாவக்கோ

**முன்னுரை**: புத்தர் மற்றும் அவரது போதனைப் பற்றி நம் நாட்டில் மிக-பல தவறான கருத்துக்கள் பரவியுள்ளன. அவைகளைத் தெளிவுபடுத்தி (நீக்கி) உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவது மிக அத்யாவசியமானது. குறிப்பாக, இது விபஸ்ஸனா சாதகர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. இல்லையெனில், அவர் உண்மை நிகழ்வுகளைப் புரிந்துகொள்ளாமல் குழப்பத்திலேயே மூழ்கி இருந்துவிடுவார். இந்த மாதத்திலிருந்து விபஸ்ஸனா செய்தி மடலில் வெளிவரும் புத்தரின் வாழ்வு நிகழ்வுகளின் மூலம் அனைத்துத் தவறான கருத்துக்களிலிருந்து விடுதலை கிடைக்காவிட்டாலும் சிலவற்றிலிருந்தாவது விடுதலை கிடைக்கும்.

# போதிஸத்வரின் கடைசி உணவு

**திரு. சத்ய நாராயண கோயங்கா**



### மிதமிஞ்சிய பயிற்சி

அந்நாட்களில், சில ஸமண மற்றும் பிராம்மண பரம்பரையின் துறவிகள் கீழ்த்தரமான பாதையை பின்பற்றுபவர்களாக இருந்தனர். தீய செயல்களை பாவமாகவும் நல்ல செயல்களைப் புண்ணியமாகவும் கருதாமலிருந்தனர். பாவ செயல்களின் பாவ விளைவுகளையோ புண்ணிய செயல்களின் நல்ல விளைவுகளையோ அவர்கள் நம்புவதில்லை. அவர்களின் இந்த பாதை தர்மத்திற்கு எதிரானதாக இருந்தது. நாத்திகர்களின் பாதையாக இருந்தது. போதிஸத்வர் அவர்களை எட்டிக்கூட பார்க்கவில்லை. பிராம்மண பரம்பரையின் சில பேர் பூசைகளும் யாகங்களும் ஹோமங்களும் செய்துகொண்டிருந்தனர். ஆனால், இறந்த பிறகு ஏதாவதொரு தேவ லோகத்தை அடைவதே அவர்களின் இலக்காக இருந்தது. மிஞ்சிபோனால், சில பேர் பிரம்ம லோகத்தை இலக்காக கொண்டிருந்தனர். எல்லா உலகங்களைக் கடந்த லோகாதீத (நிப்பாண நிலை) நிலை இவர்களின் இலக்காக இருக்கவில்லை. ஆதலால், இவர்களிடமும் போதிஸத்வர் எட்டிப்பார்க்கவில்லை.

சமண பரம்பரையின் ஒரு பிரிவு எட்டு ஸமாதி(மனக்குவிப்பு) நிலைகளைக் கொண்ட தியான பாதையை உடையதாக இருந்தது. துறவியான இளவரசர் சித்தார்த்தர் இவைகளை பயிற்சி செய்து அறிந்துகொண்டார். எட்டாம் தியான நிலை உடலில்லா அரூப பிரம்ம லோகம் வரை இட்டுச்செல்லும். அதையும் கடந்த நிலைக்கு கொண்டு செல்லாது. மிகவும் நுட்பமான நிலையாக இருப்பினும், இந்த எட்டாம் தியான நிலையும் அநித்யமான அழியக்கூடிய இயல்பை கொண்ட இந்த உலகத்திற்கு உட்பட்டதே. இதுவும் நித்யமான அழியா இயல்பை கொண்ட லோகாதீத(உலகத்தை கடந்த) நிலைக்கு இட்டுச்செல்லாது. எந்த இலட்சியத்திற்காக இளவரசர் வீட்டை துறந்தாரோ இந்த தியான மார்கத்தின்(பாதையின்) மூலம் அவர் அதை அடையவில்லை.

சமண பரம்பரையின் மற்றுமோர் பிரிவு, உடலை தண்டிப்பதன் மூலம், உடலுக்கு கஷ்டங்கள் கொடுப்பதன் மூலம் மனதிலுள்ள அழக்குகளை அகற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையை வைத்திருந்தனர்.

துறவியான சித்தார்த்தர் இதைப் பயிற்சி செய்ய விரும்பினார். ஆறு வருடங்கள் வரை உடலை தண்டித்து கஷ்டங்களை கொடுக்கும் பயிற்சியை மேற்கொண்டார். பெருமளவு உணவு உட்கொள்ளாமல் உடலை வாடவிட்டு எலும்புக்கூடு தெரியும் அளவுக்கு வருத்திக்கொண்டார். இதன் காரணமாக அவர் எழுந்து நடப்பது கூட கடினமாகிவிட்டது. மேலே எழுந்துகொள்ள முயற்சி செய்தால் நிலை தடுமாறி கீழே விழுந்துவிடுவார். ஆறு வருடங்கள் வரை இதை பயிற்சி செய்த பின்னரும் தனது இலக்கை அடையாத காரணத்தினால், இது மிதமிஞ்சியவர்களின் பாதை என உணர்ந்து, இதை விட்டுவிடுவதே உகந்தது என புரிந்து கொண்டு நடுவழிப் பாதையை மேற்கொண்டு சிறிது உணவு எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார். இதன் விளைவாக, அவருடன் இதுவரை தவம் செய்து வந்த அந்த ஐந்து சமணர்களும் ஏமாற்றமுற்று அவரை தனியே விட்டுச் சென்றனர். இளவரசர் தவத்திலிருந்து வீழ்ச்சியடைந்து விட்டார் என்று கருதினர். ஆதலால், இனி அவர் ஸம்புத்தராக உருவாக வாய்ப்பில்லை என்றும் கருதினர். ஆனால், துறவியான சித்தார்த்தர் இவைகளினால் மனம் தளரவில்லை. நடுவழிப் பாதையை பின்பற்றி பிக்ஷையில் கிடைத்த உணவை உட்கொண்டார்.

**<u>சுஜாதா அளித்த பாயாசம்</u>**

சேனானி என்பவர் உருவேளா காட்டுப்பகுதியிலுள்ள 'சேனா' என்னும் கிராமத்தின் ஒரு செல்வந்தகர். அவருடைய மகளான சுஜாதாவிற்கு அக்காட்டுப் பகுதியிலுள்ள ஒரு அரச மரத்தின் தேவதையிடம் பெரும் நம்பிக்கையிருந்தது. இந்த அரச மரத்தின் தேவதையின் ஆசியினால்தான் வாராணசியின் செல்வந்தரிடம் தமக்கு திருமணம் நிகழ்ந்தது என்று அவள் முழுவதுமாக நம்பியிருந்தாள். தேவதையின் ஆசியினால்தான் இருபது ஆண்டுகளுக்கு முன் அவளுக்கு 'யசன்' என்னும் புத்திரனும் பிறந்தான். அத்தேவதைக்கு நன்றி செலுத்துவதற்காக ஒவ்வொரு வைகாசி பௌர்ணமி அன்றும் அவளுடைய கணவர் வீட்டிலிருந்து அவளுடைய பெற்றோர் வசிக்கும் சேனா கிராமத்திற்கு வந்து அந்த அரச மர தேவதைக்கு மரியாதை செலுத்துவதுண்டு. இம்முறை அவளுடைய மதிப்பிற்குரிய தேவதைக்கு படைப்பதற்காக சுஜாதா மிகவும் சுவையான பாயாசம் செய்திருந்தார். அரச மரத்தின் பகுதியை சுத்தம் செய்வதற்காக சுஜாதா தன் பணிப்பெண்னை அனுப்பிவைத்தாள். அங்கே சென்ற அந்த பணிப்பெண் தியானி இராஜகுமாரர் அரச மரத்திற்கு அடியில் தியான நிலையில் அமர்ந்திருந்ததைக் கண்டாள். அவருடைய பளபளக்கும் முகத்தோற்றத்தையும் வசீகரிக்கும் ஆளுமையையும் கண்ட அந்த பணிப்பெண் பரவசத்துடன் நின்றுவிட்டாள். தன்னுடைய எஜமானியின் பாயாசத்தை ஏற்றுக்கொள்வதற்காக மரதேவதையே உருவம் எடுத்து வந்திருப்பதாக ஒரு பிரம்மை அந்த பணிப்பெண்ணுக்கு ஏற்பட்டது.

அவள் மகிழ்வோடு இந்த மங்களமான செய்தியை தனது எஜமானியிடம் தெரிவிப்பதற்காக வேக-வேகமாக வீட்டிற்கு சென்றாள். சுஜாதாவும் இதை கேட்டதும் பரவசமும் வியப்பும் அடைந்து தங்க பாத்திரத்தில் பாயாசத்தை நிரப்பி மரியாதைக்குரிய தனது தேவதைக்கு படைப்பதற்காக சென்றாள். ஆனால், சுஜாதா மிகவும் அறிவு நிறைந்தவளாக இருந்தாள். அவள் எந்தவிதமான பிரம்மையிலும் இருப்பவள் அன்று. பார்த்தவுடனேயே, அங்கிருப்பவர் மர தேவதையல்ல, ஒரு உயர்ந்த வம்சத்திலிருந்து துறவறம் மேற்கொண்ட ஒரு துறவி என்று அவள் புரிந்துகொண்டாள். அவருக்கு பாயாசம் படைத்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள்.

இந்த உண்மை நிகழ்வை தெரியாத சிலர் தமக்கு விருப்பமான கதைகளைப் புகுத்தினர். இதன் காரணமாக, ஒரு செல்வம் நிறைந்த மாமனாரும், ஒழுக்கமான கணவரும் அவர் மூலம் ஒரு புதல்வனை பெற வேண்டியே சுஜாதா மரதேவதையிடம் வேண்டினாள் என்ற தவறான நம்பிக்கை இருந்து வருகின்றது. இந்த தவறான நம்பிக்கையின் காரணமாகவே சுஜாதா ஒரு இளம் பெண் என்று கூறப்பட்டு வந்தது. ஆனால், உண்மையென்னவெனில், அந்நேரத்தில் அவள் முதிர்ச்சி நிலையை அடைந்திருந்தாள். ஒரு மதிக்கத்தக்க வீட்டில் அவளுக்கு திருமணமாகிவிட்டது. ஒழுக்கமான கணவரும் ஒரு மகனும் அவளுக்கு கிட்டியிருந்தது. மகனும் இளம் வயதை அடைந்திருந்தான். அவனுக்கும் திருமணம் ஆகிவிட்டிருந்தது. ஆனால், அவன் இல்லற வாழ்வில் சிறிதுகூட விருப்பம் இல்லாதவனாக

இருந்தான். தேவதையின் அருளினால்தான் அவளது ஆசைகள் நிறைவேறியுள்ளது என்று சுஜாதாவிற்கு நம்பிக்கையிருந்தது. இந்த நன்றியுணர்வினால் அவள் ஒவ்வொரு வருடமும் வைகாசி மாதத்தில் பெற்றோர் வீட்டிற்கு வரும்போது அந்த மரதேவதைக்கு பிரார்த்தனைச் செய்ய கட்டாயமாக செல்வதுண்டு. தனது மகன் பிற இளைஞர்களைப் போலவே இல்லற வாழ்வில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இந்த முறை வந்தாள். ஆனால் இந்த முறை ஒரு இளம் தியானியைப் பார்த்ததும் அவளுக்கு தாய்மையுணர்வு வெளிப்பட்டது. அவரிடம் வரம் கேட்பதற்கு பதிலாக தாய்மையுணர்வின் பாசத்தால் இளம் தியானியான சித்தார்த்தருக்கு பாயாசம் படைத்து, 'தங்கள் தவம் முழுமை பெறட்டும்' என்று அவரை ஆசிர்வதித்தாள். போதிஸத்துவரின் கடைசி உணவு இதுவாகவே இருந்தது. அடுத்த இரவு அவருக்கு சம்மா சம்போதி அதாவது பூரண ஞானத்தை அடைய வேண்டியிருந்தது. அதனால்தான் இந்த உணவு தானத்தை மிகுந்த மகத்துவம் வாய்ந்ததாக கருதுகின்றனர்.

**குறிப்பு:** போதிஸத்வர் என்னும் சொல்லின் பொருள்: புத்தர் ஆகும் ஒருவர், புத்த நிலையை அடைவதற்கு முன் அவரை போதிஸத்வர் என்று அழைக்கிறோம். அதாவது போதி, ஞானம் பெறுவதற்காக உழைப்பவர் என்று பொருள்.

## கேள்வி பதில்

**கேள்வி:** விபஸ்ஸனா தியானமுறையால் இந்தியர்களை விட வெளிநாட்டவர்களே அதிகம் பயனடைகிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். ஒப்பிட்டு நோக்கினால், அவர்கள் அதிகம் கண்ணும் கருத்தும் உடையவர்களாகவும், அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். சேவை செய்வதில்கூட அவர்கள் அதிகம் கருத்துடனும், தன்னலம் அற்றும், எந்த துறையிலும் சேவை செய்யத் தயாரானவர்களாகவும் இருக்கிறார்கள். இது ஏன்?

**கோயங்காஜி**: தம்மத்தின் போதனை அனைவருக்கும் ஒன்றானதுதான்; ஆனால், நீங்கள் உழைப்பதில்லை! எனவே, உங்களை நீங்களே சோதித்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஏன் உழைப்பதில்லை? இதில் கஷ்டம் என்னவென்றால் நீங்கள் அனைவரும், "ஆன்மா என்று ஒன்று இருக்கிறது, கடவுள் இருக்கிறார், நான் இதை நம்புகிறேன்," போன்ற தத்துவார்த்த நம்பிக்கை விளையாட்டுகளில் ஈடுபடுகிறீர்கள். அவை எல்லாம் பெரிய இடையூறாக அமைகிறது. இந்த மக்களோ, பெரும்பாலும் அத்தகைய வெறித்தனத்திலிருந்து வெளிவந்தவர்களாக இருக்கிறார்கள். "என் மனதைத் தூய்மைப்படுத்தி, என்னை நல்லவனாக ஆக்கும் ஒரு முறையைக் கற்றுக்கொள்ள நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று அவர்கள் நினைக்கிறார்கள். எனவே அவர்கள் உழைக்கிறார்கள்.

இல்லையென்றால், நீங்கள் "நான் ஒரு ஆசாரமான இந்து" அல்லது "நான் ஒரு நியமமான ஜைண மதத்தினன். நான் இப்படி மதமாற்றம் கொள்ளமுடியாது," போன்ற தளைகளால் கட்டுண்டு இருக்கிறீர்கள். விபஸ்ஸனாவின் மூலம் நீங்கள் புத்தமதத்திற்கு மாறுவதில்லை, நீங்கள் தம்மத்திற்கு மாறுகிறீர்கள். என்றாலும்கூட, இந்த சந்தேகம் உங்கள் மனதில் எழுந்தவண்ணம் இருக்கிறது. நீங்கள் இத்தகைய தளைகளிலிருந்து வெளிவரவில்லை என்றால், உங்களுக்கு உதவி செய்ய இயலாது. இந்த தளைகளிலிருந்து விடுபடுங்கள்! தம்மம் அனைவருக்கும் பொதுவானது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். எளிதாகச் சொல்லப்போனால், அது ஒரு வாழும் கலை: மனதின் மேல் எப்படிக் கட்டுப்பாட்டை வளர்த்துக்கொண்டு, மனதைத் தூய்மைப்படுத்தி, நம்மை ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ வைக்கும் கலை. நீங்கள் அதைப் புரிந்துகொண்டீர்களானால் அதிகம் உழைப்பீர்கள். அப்போது, மேலைநாட்டவர்களிடம் நீங்கள் குறிப்பிட்டுள்ள நற்குணங்கள் யாவையும் நீங்களும் பெறுவீர்கள். இயற்கை யாரையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை.

### பாலி மொழி வகுப்பு - 5

பாலி மொழி புத்தரால் பேசப்பட்ட ஒரு மொழியாகும். அவர் இம்மொழியில்தான் தம்மத்தைப் போதித்தார். ஒரு 10 நாள் விபஸ்ஸனா தியான முகாமில் கூட நாம் சில பாலி வார்த்தைகளையும் வாக்கியங்களையும் கேட்கிறோம். ஆதலால் அதன் பொருளை பிரித்து பார்ப்பதுதான் இந்த வகுப்பின் நோக்கம். இனி மாதந்தோறும் இம்மடலில் இதை நாம் பார்க்கலாம், கற்கலாம். வாருங்கள்!!!

**"பா$^3$ஹுஸச்சஞ்ச ஸிப்பஞ்ச, வினயோ ச ஸுஸிக்கி$^2$தோ;**

**ஸுபா$^4$ஸிதா ச யா வாசா, ஏதங் மங்க$^3$லமுத்தமங்.**

**பா$^3$ஹுஸச்சஞ் -** ஆழமான அறிவு, **ஸிப்பஞ் -** கைதொழில், **வினயோ -** ஒழுக்க நெறிகள், **ஸுஸிக்கி$^2$தோ -** நன்றாக கற்பது ( ஸு – நன்றாக, ஸிக்கதி – கற்றல்), **ஸுபா$^4$ஸிதா ச யா வாசா -** சிறந்த வாக்கு(ஸு – நல்ல, பாஸதி – பேசுவது, வாசா – வார்த்தைகள்), **ஏதங் –** இதுவே, **மங்க$^3$லமுத்தமங் –** உத்தமமான, மேன்மைவாய்ந்த மங்களமாகும்

ஆழமான அறிவை பெற்றிருப்பதும், கைதொழிலில் நன்கு தேர்ச்சி பெறுவதும், ஒழுக்க நெறிகளை நன்றாக கற்பதும், சிறந்த வாக்கை பெற்றிருப்பதும் ஆகிய இவை சிறந்த மங்களமாகும்

**RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07**
**REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/08-10**

## <u>கோவையில் பத்து நாள் விபஸ்ஸனா தியான முகாம்</u>

**தேதி: 15/05/2009 - 26/05/2009**

**இடம்: நேரு வித்யாலயா, தொடர்புகொள்க: திரு. பரத் ஷா – சங்கம் ஸ்டோர்ஸ், 26/932, ரங்கை கௌடர் தெரு, ஃபௌவர் மார்கெட் அருகில், கோவை 1, தொலைபேசி – 0422-2472441, 9842347244, திரு. மகேஷ் பன்சல் - 9843451153**

## <u>மதுரையில் பத்து நாள் விபஸ்ஸனா தியான முகாம்</u>

**தேதி: 22/04/2009 - 02/05/2009**

**இடம்: சேவாலயம் மாணவர் விடுதி, 24, குமாரசாமி இராஜா தெரு, ஷெனாய் நகர், மதுரை 625020, தொடர்புகொள்க: திருமதி. ரேணுகா மேத்தா - 9443728116, திரு. சீனிவாசன் - 9994657433**

## <u>விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2009</u>

***விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, ☏: 044-24780953***

| | 10 நாள் | ஸதி-பட்டான முகாம் | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | குழந்தைகள் முகாம் | 16-19 வயதுடைய மாணவர்களுக்கான முகாம் | தம்ம சேவை முகாம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **பிப்ரவரி** | 4-15 | 21-1/3 | | | | | | |
| **மார்ச்** | 4-15 | | | | 19-22 | | | 26-29 |
| **ஏப்ரல்** | 1-12, 15-26 | | | | 30-03 | | | |
| **மே** | 6-17 | | | | | 2-3, 30-31 | 21-28 | |
| **ஜூன்** | 3-14 | 20-28 | | | 18-21 | | | |
| **ஜூலை** | 1-12 22-02 | | | | | 18-19 | | |
| **ஆகஸ்ட்** | | | **5 - 26** | **5 - 5/9** | | | | 3-5 |
| **செப்டெம்பர்** | 9-20, 23-04 | | | | | | | |
| **அக்டோபர்** | 21-01 | 8-16 | | | 22-25 | | | |
| **நவம்பர்** | 4-15 18-29 | | | | | 1(நவம்பர்) | | |
| **டிசம்பர்** | 2-13 16-27 | | | | | 27-28 | | |

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014.
Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

PERIODICAL

Posted on:
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

***To***

*அனுப்புநர்*: Vipassana Meditation Centre
51 Chamiers Road, RA Puram, Chennai 600028
☏: 044-24780953
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vri.dhamma.org, www.setu.dhamma.org,
www.tamil.dhamma.org